ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1798/8 - 2013 පෙබරවාරි මස 18 වැනි සඳුදා - 2013.02.18
*1798/8 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

*எனது இல. 01/10/03 /04.*

**ஊவா மாகாண மாகாண சபை**

*ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்படும் நியமனங்கள்*

*ஊவா மாகாணத்தின் ஆளுநர் கௌரவ சீ. நந்த மெத்தியு அவர்களால் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதனை இதன் மூலம் அறிவிக்கின்றேன்.*

*1. இலங்கை கணக்காளர் சேவையின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் திரு. சீ. திசாநாயக்க அவர்கள், 2013.01.01 ஆந் திகதி முதல் ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்காளராக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2013.12.31 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்காளராக ஒப்பந்த அடிப்படையில் மீள் பணி ஆற்றுவதற்கு,*

*2. ஊவா மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், நுகர்வோர் விவகார, கூட்டுறவு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திரு. எம். ஏ. பி. தயாசெனரத் அவர்கள் 2013.01.24 ஆந் திகதி முதல் 2013.01.31 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2013.01.24 ஆந் திகதி முதல் அவர் தீவிற்கு மீளத் திரும்பும் வரை, இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I யை சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. எம். எம். ஜீ. அபேசிங்க பண்டா அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், நுகர்வோர் விவகார மற்றும் கூட்டுறவு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம் தொடர்பான அமைச்சின் செயலாளராக பதிற்கடமையாற்ற,*

*3. இலங்கை திட்டமிடல் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எம். எம். ஆனந்த விஜித குமார மாபா அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, 2013.01.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் உதவிப்பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு,*

*4. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு. ஸ்ரீ. டி. அபயகோன் அவர்கள், 2013.02.10 ஆந் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2014.02.09 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் ஊவா மாகாண கல்வி திணைக்களத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள் பணி ஆற்றுவதற்கு,*

*5. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் திரு. எச். எஸ். யாபா அவர்கள், 2013.01.10 ஆந் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2013.09.09 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் ஊவா மாகாண கல்வி திணைக்களத்தின் பிரதிக் கல்வி பணிப்பாளராக (ஆங்கிலம்) ஒப்பந்த அடிப்படையில் மீள் பணி ஆற்றுவதற்கு,*

6. இலங்கை கணக்காளர் சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. எம். அத்தனாயக அவர்கள், 2013.01.28 ஆந் திகதி முதல் பிரதி தலைமைச் செயலாளராக (நிதி) நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2014.01.27 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் பிரதி தலைமைச் செயலாளராக (நிதி) ஒப்பந்த அடிப்படையில் மீள் பணி ஆற்றுவதற்கு,

7. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I யை சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2013.01.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் பிரதி தலைமைச் செயலாளர் (நிர்வாகம்) பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு,

எச். எம். சோமதிலக,
ஊவா மாகாண ஆளுநரின் செயலாளர்.

ஆளுநரின் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை.

3-289

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.